# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,223 — 1921 ம் ௵ கார்த்திகை௴ 4 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV. — நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

---

#### 1892 ம் வருடத்துச் சிறுநகர சுகாதாரச்சட்டம்.

1914 ம் ஆண்டு ஜனவரிமாதம் 26 ம் திகதியைக்கொண்ட விளம்பரமூலமாய் 1914 ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 6 ம் திகதியைக்கொண்டட அரசாட்சி கசெற்பத்திரிகையிற் பிரசுரம்செய்யப்பட்ட பிரமாணங்களில் "T–ரோட்வரி" என்ற தலைப்பின்கீழுள்ள 3 ம், 4 ம் இலக்கம்பெற்ற பிரமாணங்களுக்குப் பதிலாக, 1892 ம் வருடத்துச் சிறுநகர சுகாதாரச்சட்டத்தின் 32 (2) என்றிலக்கம்பெற்ற பிரிவுக்கமைய, தென்மாகாணத்துக் காலிப்பிரிவுச் சுகாதாரசங்கத்தாரால் இயற்றப்பட்டு, அரசாங்க நிருவாகசபையாரோடு கூடிய தேசாதிபதியவர்களால் உறுதிப்படுததப்பட்ட பிரமாணங்கள்.

உத்தமனுர் கட்டளைப்படி,
றெம் தொம்சன்,
இராசாங்கலிகிதர்.

இராசாங்கலிகிதர் கந்தோர்.
1921 ம் ௵ அக்டோபர்௴ 31 ந் திகதி.

குறித்த பிரமாணங்கள்.

"T—ரோட்வரி"

3. வேலைசெய்யும் கடப்பாடுடைய ஒவ்வொருவரும், வேலைசெய்வதற்குப் பதிலாக, ஒவ்வொரு வருஷமும் மார்ச் மாசம் முடியமுன் இரண்டுரூபாக்கொடுத்துத் தம்மை வேலைசெய்யும் கடப்பாட்டிலிருந்து விடுதலையாக்கிக்கொள்ளுதல் நியாயமுறையாகும்.

4. அறிவித்தல் கொடுத்தபோது வேலைசெய்யவும் அல்லது வேலைசெய்வதற்குப் பதிலாகப் பணங்கொடுக்கவும், தவறியவர்களெல்லாரும் அக்கிராசனர் குறிக்கும் ஓர் தினத்துக்குமுன், பன்னிரண்டு நாள் வேலைசெய்வதற்கு அல்லது வேலைக்குப்பதிலாகக் கொடுக்கும் பணத்தை யிரட்டித்ததொகையை (ப்ப அதாவது 4 ரூபாயை) க்கொடுப்பதற்குக் கடமைப்பட்டவராவர் இங்கு விதித்தபடி செய்யத்தவறியவர்கள், 33 ம் பிரிவின்கீழ்த் தமக்குள்ள அதிகாரம்கொண்டு குறித்த அக்கிராசனரவர்களால் ஆண்டு நடத்தப்படுபவராவர்.

---

#### 1898 ம் ஆண்டின் சுகாதாரசங்கக் கட்டளைச்சட்டம்.

1898 ம் ஆண்டின் சுகாதாரசங்கக் கட்டளைச்சட்டத்து 56 (20) பிரிவின்கீழ் மாத்தளைச் சுகாதாரசங்கத்தாரால் இயற்றப்பட்ட பின்வரும் துணைப்பிரமாணங்கள் அரசாங்க நிருவாகசபையாரின் ஆலோசனையோடு உத்தமனுர் தேசாதிபதியவர்களால் உறுதிப்படுத்தப்பட்டு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றன.

உத்தமனுர் ட்டளைப்படி,
றேய்ம் தொம்ஸன்,
கலோனியல் சக்கிறத்தார்.

கொழும்பு, லோனியல் சக்கிறத்தார் கந்தோர்,
1921 ம் ௵ ஐப்பசி௴ 18 ந் உ.

1. பகிரங்க ஸ்தானக் குழாய்களிலிருந்து வீட்டுப்பாவிப்புக்கன்றி வேறு யாதோர் வேலைகளுக்கும், யாதொருவரும் தண்ணீரெடுக்கப்படாது.

2. தண்ணீரிடைவிடாது, பெருகும்படி பகிரங்கஸ்தானக் குழாய்களின் கைப்பிடிகளை அல்லது அடைப்புக்களைத் திருப்பிவைக்கத்தக்க ஏதுக்களொன்றும் பாவிக்கப்படாது.

(3) சுகாதாரசங்கத்து அக்கிராசனரின் அனுமதி அல்லது உத்தரவின்றி, பெரிய குழாய்களில் அல்லது கிளைக் குழாய்களிலிருந்து யாதொரு வீட்டுக்கு, நிலத்திற்கு, அல்லது வளவுக்குத் தண்ணீர் கொண்டுபோவதற்கு இணைக் குழாய்கள் அல்லது பரிமாற்றக் குழாய்கள் வைக்கக்கூடாது. அவ்வித குழாய்கள் சங்கத்தவரின் வேலைக்காரராலன்றியும் வைக்கப்படக்கூடாது. இனி வைக்கப்படவேண்டிய அல்லது ஊடாகச் செல்லவேண்டிய இடம் அல்லது நிலையம் இன்னதென்று சங்கத்தார் அனுமதிகொடாமலும் வைக்கப்படாது.

4. மேலே சொல்லப்பட்ட உபபிரமாணத்தின் ஏற்பாடுகளுக்குமாறாக இணைக் குழாய்கள் அல்லது பரிமாற்றக் குழாய்கள் வைக்கப்படின், அவைகளை எடுத்துப்போடும்படி சுகாதாரசங்க அக்கிராசனர் கட்டளையிடல் நியாயமுறையாகும்.

5. தண்ணீரெடுக்கு மெவராவது நீர்த்தொட்டி ஸ்தானக்குழாய் கைட்றன்ட் என்னும் சலவியந்திரம், நீர்க்குழாய், வல்வ்மூடி அல்லது அடைப்புக்குளாய்களிலிருந்து தண்ணீர் வீணாக ஓடவிடப்படாது. ஆனால் வீணாக ஓடுந் தண்ணீரை நிறுத்துதற்கான வழக்கமான ஒழுங்குகளைச் செய்யவேண்டும்.

6. சங்கத்திற்குரிய நீர்வாய்க்கால்களின் ஸ்தானக்குழாய்களின் நீர்த்தொட்டிகளின் அல்லது பாவிக்கப்படுவதற்காக பாதுகாக்கப்பட்டிருக்குந் தண்ணீர் குளங்களின் அல்லது குழாய்களின் அல்லது பாத்திரங்களின் தண்ணீரை யாதொருவரும் எவ்வகையாலாவது அசுசிப்படுத்த அல்லது அழுக்குப்படுத்தக்கூடிய எந்தச் செயலையுஞ் செய்யப்படாது அல்லது அப்பேர்ப்பட்ட ஸ்தானக்குளாய்களின் நீர்த்தொட்டிகளின் அல்லது சனங்களின் பாவிப்புக்கான குளங்களின் தண்ணீரை கலக்கி அசுசிப்படுத்தவுங் கூடாது.

7. தோவினால் அல்லது மின்னரங்களால் செய்யப்பட்டு, தண்ணீர் பைப்பிலிருந்து வெளியில் எடுப்பதற்காக இருக்குங் குழாய்களை அல்லது கருவிகளையாவது நிலையாகவேனும் கொஞ்சநாளைக்கேனும் ஒருவரும் பகிரங்கஸ்தானப் பில் தொடுக்கப்படாது.

8. பகிரங்கஸ்தானக் குழாய்களில் சேர்க்கப்பட்டிருக்கும் அல்லதோர் பாகமாயிருக்கும் தற்சலன தானைமூடுஞ் சவ்வடைப்பின் அல்லது தாமாகஇயங்கும் உபகரணங்களின் தாமாக இயங்குங்கிரிகைகளை எப்போதைக்குமேனும் கொஞ்சநாளைக்கேனும் தடைசெய்யக்கூடிய செயல்களொன்றும் ஒருவரும் செய்யப்படாது.

9. யாதோர் அறிவித்தலுமின்றி, ஒருவருக்கு அல்லது முழு நகரத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்குந் தண்ணீரின் அளவை, தேவையெனக் கண்டால், குறைக்கிறதற்கு குறித்த அக்கிராசனருக்கு அதிகாரம் உண்டு.

10. தொத்து வியாதியினால் அல்லது அதைப்போன்ற கெட்ட வருத்தங்களினால் வருந்துவோர், அப்படியான வருத்தவாளிகளை சமீபகாலத்தில் தொட்டுக் கழுவிப் பராபரித்தோர் அல்லது வேறெவ்விதமாயாவது சுத்தங் குறைந்தவர்கள் ஒருவரும் பகிரங்க ஸ்தானக்குழாய்களிலிருந்து தண்ணீர் எடுக்கப்படாது.

11. மாத்தளை சுகாதாரசங்கத்தின் எல்லைக்குள் உள்ள தெருக்கள் வீதிகள் அல்லது மற்றும் பிரசித்த இடங்களில் சங்கத்தார் பொறுப்பில் இப்போதுள்ள அல்லது இனிமேற் கட்டப்படும் யாதொரு நீர்நிலை, நிலைக்குழாய், செய்நீரூற்று, தொட்டி, குழாய் அல்லது மற்றும் தண்ணீர் வேலைக்குரிய இடங்களில் அல்லது அவைகளுக்குச் சமீபமாக ஒருவரும் முழுகவாவது தங்கள் உடம்பின் யாதொரு பகுதியைக் கழுவவாவது யாதொரு ஆடுமாடு குதிரை நாய் மற்றும் மிருகங்களை யாயினும் யாதொரு வண்டில் சவாரிப்பொருள், புடவை தட்டுமுட்டு அல்லது மற்றும் பொருள்களை யாயினும் கழுவவாவது கூடாது.

---

## காணி விற்பனவுகள்.

**No. 938, N. P.**—1921 ம் ஆண்டு டிசெம்பர் (மார்கழி) மாதம் 20 ந் திகதி, செவ்வாய்க்கிழமை பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் கச்சேரி விற்பனவு வங்களாவில் வடமாகாணத்து கவர்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணிவிற்பனவைப்பற்றிச் செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது தீர்ந்துவிடப்படும் அல்லது வேறுமாதிரியாக விற்கப்படும். 74 காணித்துண்டுகள், வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சி கிழக்கு, வடமராட்சி மேற்கு, கரைச்சி, பூநகரி, தீவுப் பகுதிகளி லிருக்கின்றது.

வடமராட்சி மேற்குப் பகுதி. பிளான் இலக்கம் 5,375. குறிச்சி—துன்னாலைவடக்கு.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | று. | ப. | தரிப்புவிலை வக்கர் ஒன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஒடை .. | கெ. நாராணபிள்ளை (கேள்விக்காரனால் கூட்டப்பட்ட நிலம்) | தென்னைத்தோட்டம் .. | 0 | 0 | 10·7 | 600 |
| 2 | ஒடை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 7·9 | 600 |
| 3 | ஒடை .. | பொதுவிற்பனவு .. | பாவிக்கப்படாத வாய்க்கால் | 0 | 0 | 4 | 500 |
| 4 | ஒடை .. | வி. சின்னத்தம்பியும் கெ. இராமலிங்க ஐயரும் | பாவிக்கப்படாத வாய்க்கால் ஒரு பனையுடன் | 0 | 0 | 22·1 | 500 |
| 5 | ஒடை .. | எ. கதிராதயையும் வி. சிவகாமியும் .. | பாவிக்கப்படாத வாய்க்கால் | 0 | 0 | 5 | 500 |
| 6 | ஒடை .. | ஷை .. (கூட்டப்பட்ட நிலம்) | ஷை (3 தென்னமரத்துடன் | 0 | 0 | 11·4 | 600 |
| 7 | ஒடை .. | கெ. சுப்பர் (கூட்டப்பட்ட நிலம்) .. | பாவிக்கப்படாத வாய்க்கால் (2 தென்னையும் 1 பனையும்) | 0 | 0 | 7·5 | 600 |
| | | பிளான் இலக்கம் 5,449. குறிச்சி—துன்னாலைவடக்கு. | | | | | |
| 1 | மகிராயன்வயல் .. | கெ. இரத்தினசிங்கத்தாற் கூட்டப்பட்ட நிலம் | வயல் .. .. | 0 | 3 | 8 | 75 |
| 2 | ஷை .. | சின்னத்தம்பி பெண் லட்சுமியாற் கூட்டப்பட்ட நிலம் | வயல் .. .. | 0 | 0 | 5 | 100 |
| 3 | ஷை .. | சிதம்பரப்பிள்ளை பெண் பொன்னுச்சிப்பிள்ளையால் கூட்டப்பட்டநிலம் | வயல் .. .. | 0 | 0 | 35 | 100 |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரரின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | று. | ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | மகிராயன் வயல் .. | கணவதிப்பிள்ளை வடிவேலுவாற் கூடப்பட்ட நிலம் | வயல் .. .. | 0 | 0 | 13 | 100 |
| 5 | ஷை .. | வி. சின்னத்தம்பி செல்லமுத்துவாற் கூட்டப்பட்ட நிலம் | ஷை .. | 0 | 0 | 14 | 100 |
| 6 | ஷை .. | ஆள்வான்கந்தராற் கூட்டப்பட்ட நிலம் | ஷை .. | 0 | 0 | 7 | 100 |
| 7 | ஷை .. | சண்முகம் குமாரசாமியாற் ஷை | ஷை .. | 0 | 0 | 6 | 100 |
| 8 | ஷை .. | சின்னையா தம்பையாராற் ஷை | ஷை .. | 0 | 0 | 6 | 100 |
| 9 | ஷை .. | முருகேசு வேலும் மயிலுவாற் ஷை | ஷை .. | 0 | 0 | 13 | 100 |
| 10 | ஷை .. | ஆர். சிதம்பரப்பிள்ளையும் வி. சிவகுருவாலும் கூட்டப்பட்ட நிலம் | ஷை .. | 0 | 0 | 17 | 100 |
| 11 | ஷை .. | சித்தர் வயிரமுத்துவாற் கூட்டப்பட்ட நிலம் | ஷை .. | 0 | 0 | 2 | 100 |
| 12 | ஷை .. | சிதம்பரி கைம்பெண் தெய்வியாற் கூட்டப்பட்ட நிலம் | ஷை .. | 0 | 0 | 3 | 75 |
| 13 | ஷை .. | வயிரவியார் செல்லியாராற் கூட்டப்பட்ட நிலம் | ஷை .. | 0 | 0 | 6 | 75 |
| 14 | ஷை .. | தமோதரம் பிள்ளை செல்லத்துரையாய் கூட்டப்பட்ட நிலம் | ஷை .. | 0 | 0 | 7 | 75 |
| 15 | ஷை .. | சின்னத்தம்பி செல்லப்பாவாற் கூட்டப்பட்ட நிலம் | ஷை .. | 0 | 0 | 9 | 75 |
| 16 | ஷை .. | சின்னையா மகன் சிவக்கொழுந்துவாற் கூட்டப்பட்ட நிலம் | ஷை .. | 0 | 0 | 7 | 75 |
| 17 | ஷை .. | தாமர் சின்னத்தம்பியாற் கூட்டப்பட்ட நிலம் | ஷை .. | 0 | 0 | 6 | 75 |
| 18 | ஷை .. | கணபதிப்பிள்ளை பெண் செல்லத்தாற் கூட்டப்பட்ட நிலம் | ஷை .. | 0 | 0 | 28 | 75 |
| 19 | மகிராயன் குளம் .. | — .. | குளம் (சேமிக்கப்பட வேண்டியது) | 11 | 3 | 27 | —* |

கரைச்சிப்பகுதி. பிளான் இலக்கம் 51. 1 ம் பிரிவு. குறிச்சி—பெரியகுளம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | புறகரை வயல் .. | கதிர்காமர்வேலாயுதரும் கதிர்காமர் கந்தரும் | வயல் .. | 18 | 3 | 23 | —† |

பிளான் இலக்கம் 5,471. குறிச்சி—பெரிய பரந்தன்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | தியாகர் வயல் .. | விசுவர் சரவணை .. | வயலுக்குத்தகுந்த பற்றைக்காடு | 4 | 3 | 38 | 17 |
| 2 | ஷை .. | பரமு கனகசபை .. | பற்றைக்காடு (பகுதி வயலாக்கப்பட்டிருக்கின்றன) | 4 | 1 | 1 | 16 |
| 3 | ஷை .. | எஸ். விஞசித்தம்பியாற் கூட்டப்பட்ட நிலம் | வயல் .. | 0 | 0 | 31 | 24 |

பிளான் இலக்கம் 5,472. குறிச்சி—குஞ்சுப் பரந்தனும் பெரிய பரந்தனும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சங்கரவயல் .. | — .. | பற்றைகாடு (பாதைக்குச் சேமிக்கப்படவேண்டியது) | 0 | 1 | 1 | —* |
| 2 | ஷை .. | கந்தர் கணபதி .. .. | பற்றைக்காடு (வயலுக்குத் தகுந்தது) | 3 | 3 | 22 | 17 |
| 3 | கொல்லனுறு வயற்காடும் சங்கரவயல் இளமருதோடையும் | எ. பொன்னையா .. .. | வயலுக்குத்தகுந்த காடு .. | 5 | 0 | 31 | 18 |
| 4 | நீர்க்குழி .. | — .. .. | நீர்க்குழி (சேமிக்கப்பட வேண்டியது) | 0 | 0 | 31 | —* |
| 5 | கொல்லனுறு வயற்காடும் சங்கரவயல் இளமருதோடையும் | நவசர் சின்னையா .. | பற்றைக்காடு (வயலுக்குத் தகுந்தது) | 3 | 3 | 35 | 18 |
| 6 | கொல்லனுறுவயல் .. | வி. வல்லிபுரத்தாற் கூட்டப்பட்ட நிலம் | வயல் .. .. | 0 | 2 | 1 | 36 |
| 7 | கோவிலன்தறை .. | ஆர். முருகேசு (கேள்விக்காரனல் ஒரு பகுதி கூட்டப்பட்ட நிலம்) | பற்றைக்காடு (பகுதி வயலாக்கப்பட்டிருக்கிறது) | 3 | 0 | 9 | 20 |
| 8 | கொல்லனுறுவயற்காடு .. | — .. .. | பற்றைக்காடு (கொல்லாற்றுக்குச் சேமிக்கப்படவேண்டியது) | 2 | 1 | 11 | —* |
| 9 | ஷை .. | — .. .. | ஷை .. | 2 | 2 | 23 | —* |
| 10 | ஷை .. | ஆர். முருகேசு .. .. | வயலுக்குத்தகுந்த பற்றைக்காடு | 7 | 3 | 19 | 18 |
| 11 | ஷை .. | கெ. கந்தையா .. .. | ஷை .. | 3 | 2 | 15 | 18 |

பூநகரிப்பகுதி. பிளான் இலக்கம் 5,456. குறிச்சி—வெட்டுக்காடு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | இலகடிசோலை .. | வி. சுப்பிரமணியம் .. | தென்னைக்குத் தகுந்த பற்றைக்காடு | 25 | 1 | 20 | 34 |
| 2 | ஷை .. | — .. .. | பற்றைக்காடு (ஒழுங்கைக்குச் சேமிக்கப்படவேண்டியது) | 0 | 2 | 35 | —* |

| சாணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | | பிளான் இலக்கம் 5,470. குறிச்சி—வெட்டுக்காடு. | | | | | |
| 1 | இலகடிசோலை | ரீ. சபாரத்தினம் | தென்னைக்குத்தகுந்த காடு | 9 | 2 | 0 | 36 |
| 2 | ஷை | — | பற்றைக்காடு (ஒழுங்கைக்குச் சேமிக்கப்படவேண்டியது) | 0 | 1 | 33 | —* |
| | | பிளான் இலக்கம் 5,488. குறிச்சி—வெட்டுக்காடு. | | | | | |
| 1 | காத்தான்புலவு | — | பற்றைக்காடு (வண்டிப்பாதைக்குச் சேமிக்கப்படவேண்டியது) | 0 | 0 | 32 | —* |
| 2 | ஷை | வி. காசிப்பிள்ளை | வயலுக்குந் தென்னைக்குந் தகுந்த பற்றைக்காடு | 9 | 2 | 5 | 20 |
| 3 | ஷை | — | பாழ்நிலம் (ஒழுங்கைக்குச் சேமிக்கப்படவேண்டியது) | 0 | 0 | 10 | —* |
| | | பிளான் இலக்கம் 5,466. குறிச்சி—மட்டுவில்நாடு. | | | | | |
| 1 | நவத்தாள்வு | — | பற்றைக்காடு (வழிக்குச் சேமிக்கப்படவேண்டியது) | 1 | 0 | 37 | —* |
| 2 | சொறிக்குளம்பிட்டி | கெ இராமசாமி, எஸ். குழந்தை, எஸ். வயித்தியலிங்கம், நாராணன் பெண் சிதேவன் என்பவர்களால் கூட்டப்பட்ட நிலம் | புகையிலைத்தோட்டம் | 0 | 0 | 29 | 24 |
| 4 | நவத்தாள்வு | — | பற்றைக்காடு (றோட்டுக்குச் சேமிக்கப்படவேண்டியது) | 1 | 0 | 36 | —* |
| 5 | ஷை | — | ஷை | 0 | 1 | 12 | —* |
| | | பிளான் இலக்கம் 5,462. குறிச்சி—மட்டுவில்நாடு. | | | | | |
| 1 | ஆதிப்புலம் | வி. இராமலிங்கம் | வயலுக்குத்தகுந்த பற்றைக்காடு | 9 | 3 | 4 | 16 |
| 2 | ஷை | — | பற்றைக்காடு (வழிக்குச் சேமிக்கப்படவேண்டியது) | 0 | 1 | 26 | —* |
| | | பிளான் இலக்கம் 5,491. குறிச்சி—நல்லூர். | | | | | |
| 1 | பாலைமோட்டை | — | வெளிநிலம் (றோட்டுக்குச் சேமிக்கப்படவேண்டியது) | 0 | 0 | 30 | —* |
| 2 | ஷை | ஆர். சிற்றம்பலம் | வயலுக்குத்தகுந்த வெளி நிலம் | 1 | 1 | 28 | 21 |
| | | பிளான் இலக்கம் 5,489. குறிச்சி—கிராஞ்சி. | | | | | |
| 7 | செட்டிபள்ளம் | ஏ. கதிரனாற் கூட்டப்பட்ட நிலம் | வயல் | 0 | 1 | 36 | 25 |
| | | பிளான் இலக்கம் 5,483. குறிச்சி—பொன்னாவெளி. | | | | | |
| 3 | ஒருக்கொம்பன்காடு | எஸ். சுப்பிரமணியம் | வயலுக்குத் தகுந்த காடு | 9 | 3 | 12 | 18 |
| 5 | கற்கேணிக்காடு | — | காடு (றோட்டுக்குச் சேமிக்கப்படவேண்டியது) | 1 | 0 | 1 | —* |
| 7 | திருமந்தாள்காடு | எஸ். சுப்பிரமணியம் | வயலுக்குத்தகுந்த காடு | 1 | 2 | 22 | 18 |
| 8 | ஷை | — | காடு (றோட்டுக்குச்சேமிக்கப்படவேண்டியது) | 0 | 0 | 17 | —* |
| 9 | ஷை | — | ஷை | 0 | 0 | 28 | —* |
| 10 | ஷை | எஸ். சுப்பிரமணியம் | வயலுக்குத்தகுந்த காடு | 0 | 1 | 33 | 17 |
| | | தீவுப்பகுதி. பிளான் இலக்கம் 5,222. குறிச்சி—வேலணைமேற்கு. | | | | | |
| 1 | கருக்குவாச்சியடிக்குக்கிழக்கு | பொதுவிற்பனவு | இளந்தென்னைத்தோட்டம் | 1 | 2 | 24 | 40 |
| | | பிளான் இலக்கம் 5,402. குறிச்சி—மண்டைதீவு. | | | | | |
| 1 | செம்பாடு | ஏ. தம்பு | புகையிலைச் செய்கைக்குத் தகுந்த பற்றைக்காடு | 0 | 1 | 32 | 120 |
| 2 | ஷை | — | பற்றைக்காடு (கடலுக்குச்சேமிக்கப்பட வேண்டியது) | 0 | 1 | 38 | —* |
| | | பிளான் இலக்கம் 5,420. குறிச்சி—கரம்பன். | | | | | |
| 1 | வரகுகாடு அல்லது சீனன் புதுகலட்டு | வி. கணபதியும் மறுபேரு மூரித்தாடுவது | வரகு செய்கைபண்ணப்படுவது | 2 | 0 | 9 | 20 |
| | | பிளான் இலக்கம் 5,452. குறிச்சி—புங்குடுதீவு மேற்கு. | | | | | |
| 1 | முருங்கைத்திடலுக்குக் கிழக்கு | எஸ் அப்துல்காதராற் கூட்டப்பட்ட நிலம் | வயல் | 0 | 1 | 25 | 20 |
| 3 | ஷை | எஸ். சண்முகத்தாற் கூட்டப்பட்ட நிலம் | நெற்செய்கைக்குத் தகுந்த வெளி நிலம் | 0 | 1 | 1 | 25 |

பிளான் இலக்கம் 5,447. குறிச்சி—புங்குடுதீவு கிழக்கு.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயா | விபரம். | விசாலம். ஏ. | று. | ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | வரைதீவு | — | வெளிநிலம் (பாதைக்குச்சேமிக்கப்பட வேண்டியது) | 0 | 0 | 39 | —* |
| 4 | பெரியாம்பிட்டிக்குவடக்கு | வி. கந்தையா வி. காத்தி, வி. இளைய பிள்ளை உரித்தாடப்படுவது | வயல் | 0 | 2 | 2 | 20 |

பிளான் இலக்கம் 5,445. குறிச்சி—நயினாதீவு.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயா | விபரம். | விசாலம். ஏ. | று. | ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சல்லித்திடல் | எஸ். எ. எம். வாப்பு சாகிபு மரைக்காயர் | தென்னைக்குத்தகுந்த வெளிநிலம் | 0 | 1 | 17 | 20 |
| 2 | மலாயன்திடல் | ஷை (கூட்டப்பட்டநிலம்) | தென்னைத்தோட்டம் | 0 | 2 | 8 | 80 |
| 3 | ஷை | — | வெளிநிலம் (கடலுக்குச்சேமிக்கப்படுவது) | 1 | 3 | 22 | —† |

* விற்பனவுக்கல்ல. † ஜெனறல் ஓடர் 1168 (IV) ன் பிரகாரம் கேள்விக்காரருக்கே கொடுபடும்.

இக்காணிகளைப்பற்றிய மறுவிபரங்களை, வடமாகாணம் கவண்மேந்து ஏசன்றுத்துரையிடத்திலும் படங்களைப் பற்றி அளவுகந்தோர்த் தலைவரிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1921 ம் ஹு கார்த்திகைமீ 2 ந் உ.

இறேயிம் தொம்ஸன்,
கொலோனியல் சக்கிறுத்தார்.

---

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஹு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கிரிமெத்தியானுவிலிருந்து புஜம்போலைக்குப் போகும் றோட்டுக்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை அஃதாவது:—

பிரதமபடத்து இல. 5,030. குறிச்சி—கல்டன்டுவெவ.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | — | வண்டில்பாதை | சிலாவதென்னந்தோட்டத்து கொம்பனிகாறர் | 0 | 1 | 23·6 |

எடுத்துக் கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஹு-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1921 ம் ஹு மார்கழிமாசம் 13 ந் தேதியிலன்று காலை 11 மணிக்கு ஹால்தண்டுவெவ தானயவீட்டில் என்முன்பாக வெளிப்படுத்தித் தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

புத்தளம் கச்சேரி,
1921 ம் ஹு ஐப்பசிமீ 27 ந் உ.

டபிள்யு. கே. ஏச். கெம்பெல்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## உரிமைபெறும் யாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இலக்கம் 7,991, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள், 1921 ம் ஹு (நவம்பர்) கார்த்திகைமீ 4 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம்பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் என். ஏ. காம்ரன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

என். ஏ. காம்ரன்,
விசேஷ உத்தியோகத்தர்.

கவனிப்பு.—இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விபரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக்கு வேஉடவிலி காத்பத்தில் மதுறேகோறளையைச்சேர்ந்த, கனேகொட என்னுங் கிராமத்திலுள்ள இத்துட னிணைக்கப்படும் பட்டப்பிரதியில்* விவரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

அட்வான்ஸ் எக்சிறுக்ற் 1 ம் இலக்கம் இலங்கை அளவைப் பிரதமபடம் 402.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 2 .. | லோவெர்லூட்ஸ்லீ தோட்டம் (அடிப்பாதைக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) .. | 0 0 3 |
| 3 .. | ஷெ (இனிமேல் வெட்டப்படஇருக்கும் கரத்தை றேட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) .. | 0 1 13 |
| | | 0 1 16 |

எல்லைகளாவன : வடக்கு-வதன்னேயிலிருந்து போகும் அடிப்பாதை ; கிழக்கு-தம்பற்கலவிலிருந்து வெஉடவுக்குப் போகும் கன்சபாவ றேட்டு ; தெற்கு-பறகொட கிராம எல்லை ; மேற்கு-முடியால் விற்கப்பட்ட லோவெர்லூட்ஸ்லீ தோட்டம், ஜி. கிரிபண்டாவும் மற்றவர்களும் உரித்தாடும் புதுகாமுலயேனே.

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 1454 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[குருநாக்கல் வி. உ. 110—1921.]

---

[அறிவித்தல் இலக்கம் 7,992, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குணடென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள் 1921 ம் ஆடு (நவம்பர்) கார்த்திகைமீ 4 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் என். ஏ. காம்றன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குணடெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

என். ஏ. காம்றன்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு—இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விபரம்.

வடமேன் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக தேவமெதிகாத்பத்துக் கிறத்தலானக் கோறளையில் மகாகல்வெவக் கிராமத்திலிருக்கு மித்துட னிணைக்கப்படும் பட்டப்பிரதிகளில்* விவரித்தபடியே கீழ்க்குறிக்கப்படும் காணித்துண்டுகள் :—

I.—இலங்கை யளவைப் பிரதமபடம் 1,807.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 1 .. | கலகாவயேன்யாய .. .. .. .. | 30 0 18 |
| 2 .. | கன்சப்பாவறேட்டு .. .. .. .. | 1 3 36 |
| 3 .. | நுககாமுலயேன, வெவஇயலயேன்யாய .. .. .. | 36 0 20 |
| 4 .. | மகாகல்வெவமூக்கலான .. .. .. .. | 10 0 28 |
| 5 .. | மகாகல்வெவேவெவ (குளமும் கட்டும்) .. .. .. | 3 3 27 |
| 6 .. | நுககாமுலயேன (குளக்கட்டுச் சேமிம்பு) .. .. .. | 0 2 13 |
| 8 .. | கலகாவயேன ( ஷெ ) .. .. .. | 0 1 13 |
| 9 .. | பெலிவெற்றியேவெவ (குளமும் கட்டும்) .. .. .. | 1 3 25 |
| | | 85 0 20 |

எல்லைகளாவன : வடக்கு-காற்றவில்லக் கிராம வெல்லை ; கிழக்கு-வல்பதுவக் கிராம வெல்லை, குடாகல்வெவக் கிராம வெல்லை ; தெற்கும் மேற்கும்-மடஇன்ன கிராம எல்லை.

கவனிப்பு.—மேற்குறித்த எல்லைகளுக் குட்பட்டதாகிய கீழ்க்குறிக்குங் காணித்துண்டு இவ்வறிவித்தலினின்றும் விலக்கப்பட்டிருக்கின்ற தென்பதையும் அதன் விசாலமாகும் 4 ஏக்கர் 1 றூட் 9 பேட்சும் மேற்சொல்லிய 85 ஏக்கர் 20 பேட்சுக்குள்ளு மடங்கவில்லை யென்பதையுங் கவனிக்கவேண்டியது :—

இலங்கை யளவைப் பிரதமபடம் 1,807.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 7 .. | கன்சூரியகாமுலவெல .. .. .. .. | 4 1 9 |

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1455 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[குருநாக்கல் வி. உ. 111—1921.]

[அறிவித்தல் இல 7,993, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1921 ம் ௵ (நவம்பர்) கார்த்திகைமீ 4 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் என். ஏ. காம்ரன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதவைகளை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

என். ஏ. காம்ரன்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு.—இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை யறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக்கு வேஉடவிலிகாத்பத்தில் மதுறே கோறளையைச்சேர்ந்த பறகொட என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதிகளில்* விவரித்தபடியே, கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் :—

I.—அட்வான்ஸ் எக்ஸ்ருக்ற் இலக்கம் 1, இலங்கை யளவைப் பிரதமபடம் 822.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 1 | .. | லோவர் ஹூட்ஸ்லீதோட்டம் (இனிமேல் வெட்டப்படவிருக்கும் கரத்தைறோட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) .. .. .. .. | 0 1 1 |

எல்லைகளாவன: வடக்கு-முடியால் விற்கப்பட்ட லோவர்ஹூட்ஸ்லீ தோட்டம், கனேகொட கிராம எல்லை; கிழக்கு-றம்படகலவிலிருந்து வேஉடவுக்குப் போகும் கன்சபாவ றோட்டு; தெற்கு-பீ. உக்குபண்டாவும் மற்றவர்களும் உருத்தாடும் கலகாமடேகேனை, முடியால் விற்கப்பட்ட லோவர்ஹூட்ஸ்லீ தோட்டம்; மேற்கு-முடியால் விற்கப்பட்ட லோவர் ஹூட்ஸ்லீ தோட்டம்.

II.—அட்வான்ஸ் எக்ஸ்ருக்ற் இலக்கம் 1, இலங்கை அளவைப் பிரதமபடம் 822.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 3 | .. | லோவெர் ஹூட்ஸ்லீ தோட்டம் (இனிமேல் வெட்டப்படவிருக்கும் கரத்தைறோட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) | 0 0 20 |

எல்லைகளாவன: வடக்கு-ஓர் தொல; கிழக்கு-றம்படகலவிலிருந்து வேஉடவுக்குப் போகும் கன்சபாவ றோட்டு; தெற்கு-ரீ. புஞ்சவும் மற்றவர்களும் உரித்தாடும் தலகொட்டுவவத்தை; மேற்கு-முடியால் விற்கப்பட்ட லோவெர்ஹூட்ஸ்லீ தோட்டம்.

III.—அட்வான்ஸ் எக்ஸ்ருக்ற் இலக்கம் 1, இலங்கை யளவைப் பிரதமபடம் 822.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 4 | .. | லோவெர்ஹூட்ஸ்லீ தோட்டம் (இனிமேல் வெட்டப்படவிருக்கும் கரத்தை றோட்டு) .. | 1 3 30 |

எல்லைகளாவன: வடக்கு-முடியால் விற்கப்பட்ட லோவெர்ஹூட்ஸ்லீ தோட்டம்; கிழக்கு-டபிள்யு. அப்புகாமியும் மற்றவர்களும் உரித்தாடும் கல்ஒட்டுவாவவத்தை, முடியால் விற்கப்பட்ட லோவெர்ஹூட்ஸ்லீ தோட்டம், ஓர் தொல, கன்சபாவ றோட்டு, பின்காமியும் மற்றவர்களும் உரித்தாடும் கறகாயாயேயேனை; தெற்கு-முடியால் விற்கப்பட்ட லோவெர் ஹூட்ஸ்லீ தோட்டம்; மேற்கு-சுப்ப முதலாளியும் மற்றவர்களும் உரித்தாடும் கல்கற்றியயேனை.

IV.—அட்வான்ஸ் எக்ஸ்ருகற் இலக்கம் 1, இலங்கை அழவைப் பிரதமபடம் 822.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 7 | .. | லொவெர்ஹூட்ஸ்லீ தோட்டம் (இனிமேல் வெட்டப்படவிருக்கும் கரத்தை றோட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) .. .. .. .. | 0 0 23 |

எல்லைகளாவன: வடக்கு-முடியால் விற்கப்பட்ட லோவெர்ஹூட்ஸலீ தோட்டம், டபிள்யு. அப்புகாமியும் மற்றவர்களும் உரித்தாடும் கலஒட்டுவாவவத்தை; கிழக்கு-டபிள்யு. அப்புகாமியும் மறுபேரும் உரித்தாடும் கலஒட்டுவாவவத்தை, றம்படகலவிலிருந்து வேஉடவுக்குப் போகும் கன்சபாவ றோட்டு; தெற்கு-றம்படகலவிலிருந்து வேயுடவுக்குப் போகும் கன்சபாவ றோட்டு; மேற்கு-ஓர் தொல, முடியால் விற்கப்பட்ட லோவெர்ஹூட்ஸ்லீ தோட்டம்.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1456—1457 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

[குருநாக்கல் வி. உ. 112—1921.]

---

[அறிவித்தல் இல. 7,994, கொழும்பு.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணியிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1921 ம் ௵ (நவம்பர்) கார்த்திகைமீ 4 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கொழும்புக் கச்சேரியில் கொழும்பு டிஸ்திறிக்கின் உப உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது அதிலொன்றுக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட காணிகள் அல்லது அவைகளில் ஏதொன்று உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு 1897 ம் ஆண்டின் 1 ம் இலக்கச் சட்டத்தினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகள் முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

சீ. எல். விக்றமசிங்க,
கொழும்பு டிஸ்திறிக் உப உதவி அரசாட்சி ஏசென்று.

கவனிப்பு.—குறித்த காணிகளுக்கூடாக விருக்கும் வழிப்பாதை உரித்து காணிகளிலுள்ள சொந்தைகுறித்து,

### குறித்த காணிகளின் விபரம்.

மேல்மாகாணம் கொழும்பு டிஸ்திறிக் சல்பிற்றி கோறளையில் உடுகொபத்துவில் பட்டுவந்தற என்னுங் கிராமத்தினுள்ள இத்துட னிணைத்திருக்கும் படப்பிரதிகளில்* விபரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.—பிரதம படம் 17,256.

| காணித்துண்டு. | காணிப் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 1 | பழைய தெருவின் பங்கு | 0 0 0·2 |

எல்லைகளாவன: வடக்கும் கிழக்கும் மடபாத்தபத்துவந்தாவிலிருந்து கெஸ்பாவவுக்குப் போகும் றேட்டு; மேற்கு-முடி உருத்தாடும் அனுபோககனத்த (இடுகொடு).

II.—பிரதமபடம் 17,256.

| காணித்துண்டு. | காணிப் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 2 | பழைய தெருவின் பங்கு | 0 0 0·5 |
| 3 | ஷை | 0 0 0·8 |
| | | 0 0 1·3 |

எல்லைகளாவன: வடகிழக்கு-பீ. தொன் ஜேம்ஸ் உருத்தாடும் கொன்னகாவத்த; தென்கிழக்கு-பீ. தொன் ஜேம்ஸ் உருத்தாடும் குடகண்டீவத்த; வடமேற்கு-மடபாத்த பத்துவந்தாவிலிருந்து கெஸ்பாவவுக்குப் போகும் றேட்டு.

III.—பிரதம படம் 17,256.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 4 | பழையதெருவின்பங்கு | 0 0 1·2 |
| 5 | ஷை | 0 0 0·1 |
| | | 0 0 1·3 |

எல்லைகளாவன: தென்கிழக்கு-பீ. தொன் அர்னோலிஸ் உருத்தாடும் குடகண்டிவத்த, கந்தகே தொன் திகோனிஸ் உருத்தாடும் கோங்காவத்த; தென்மேற்கும் வடமேற்கும்-மடபாத்தபத்து வந்தாவிலிருந்து கெஸ்பாவவுக்குப் போகும் றேட்டு.

IV.—பிரதமபடம் 17,256.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 6 | பழையதெருவின்பங்கு | 0 0 1 |
| 7 | ஷை | 0 0 0·1 |
| | | 0 0 1·1 |

எல்லைகளாவன: வடக்கு-மடபாத்தபத்து வந்தாவிலிருந்து கெஸ்பாவவுக்குப்போகும் றேட்டு; கிழக்கு-பீ. தொன் தானியல் உருத்தாடும் அஸ்வதுமகும்புறே வத்தவும் பீ. தொன்தானியல் உருத்தாடும் அஸ்வதுமகும்புறவும்; தெற்கு-பீ. தொன்தானியல் உருத்தாடும் அஸ்வதுமகும்புற; மேற்கு-மடபாத்தபத்துவந்தா றேட்டிலிருந்து கெஸ்பாவவுக்குப்போகும் றேட்டு.

V.—பிரதமபடம் 17,256.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 8 | பழையதெருவின் பங்கு | 0 0 1·1 |

எல்லைகளாவன: வடகிழக்கு-மடபாத்தபத்துவந்தா றேட்டிலிருந்து கெஸ்பாவவுக்குப்போகும் றேட்டு; தென் மேற்கும் வடக்கும் மேற்கும்- 120,263 ம் உரிமைப்படத்தில் விபரித்திருக்குங் காணி.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1457—1459 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக

---

### கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

கொஸ்லாந்த ஆசுப்பத்திரிக்குரிய நிலத்தில் நிற்கும் றபர் மரங்களின் குத்தகையை விற்பதற்காய் ஊவா மாகாண ஏசண்டுத்துரை அவர்களால் 1921 ம் ஆண்டு மார்கழிமாதம் 12 ம் திகதி மத்தியானம் 12 மணி நேரம்வரைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுகொள்ளப்படும். குத்தகைக்காரர் அந்த இடத்தை துப்பரவாயும் அதில்உள்ள மரங்களைப் பழுதுபடாமலும் வைக்கவேண்டும். கேள்விபபத்திரத்தின் மேல்உறையின் இடது மூலையில் ஆசுபத்திரியினுடைய பெயரும் எழுதபட்டிருக்க வேண்டியது. அனுகூலமான கேள்விக்காரன் கேள்வித்தொகையைமுற்பணமாய் வதுளை கச்சேரியில் கட்ட ஆயத்தமாயிருக்க வேண்டியது.

வதுளைக் கச்சேரி,
1921 ம் ௵ கார்த்திகை௴ 1 ௳.

சீ. சுண்டரலிங்கம்,
ஊவா கவண்மேந்து ஏசண்டுக்காக.

---

### சுப்பிரீங்கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபோர்ந்த சுப்பிரீங்கோட்டார் கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கண்டி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங்கோட்டாரால் குருநாக்கல் டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினல் வழக்குவிசாரணை, 1921 ம் ஆண்டு மார்கழி மாதம் 1 ந் திகதியாகிய வியாழக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

பிஸ்கால் கந்தோர்,
1921 ம் ௵ கார்த்திகை௴ 1 ௳.

எஸ். டீ. சமரஸிங்க,
பிஸ்காலுக்காக.

---

H. R. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.